# 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் மற்றும் பிற பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 6/1988)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Drugs and Other Stores (Unlawful Possession) Act, 1986

**(Tamil Nadu Act No.6 of 1988)**

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :
தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் மற்றும் பிற பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 6/1988)

பிரிவு பொருளடக்கம்


1. குறுந்தலைப்பு,பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.
3. மருந்து அல்லது பிற பொருட்களைச் சட்ட விரோதமாக வைத்திருத்தல்.
4. ஆய்வாளரின் அதிகாரங்கள்.
5. காப்பு.
6. பறிமுதல் செய்வதற்கு உட்பட்ட பொருட்கள்.
7. எவ்வாறு பறிமுதல் செய்வது.
8. மருந்துப் பொருட்களையும் பிற பண்டகப் பொருட்களையும் தீர்வு செய்தல்.
9. சிலரை அரசுப் பணியாளர்களாகக் கருதுதல் வேண்டும்.
10. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.
11. விதிகள், அறிவிக்கைகளைச் சட்டமன்றத்தில் வைத்தல் வேண்டும்.

# 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் மற்றும் பிற பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 6/1988)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான மருந்துப் பொருட்கள் மற்றும் பிற பண்டகப் பொருட்களைச் சட்ட விரோதமாக வைத்திருக்கும் குற்றத்திற்காகத் தண்டனை வழங்குவதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் முப்பத்தி ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்**.– (1) இந்தச் சட்டம், 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப்பொருட்கள் மற்றும் பிற பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இச்சட்டம், தமிழ்நாடு மாநிலம் முழுவதும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கை மூலம் குறிப்பிடக்கூடிய நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**.– இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(1) "மருந்து" என்பதில்,–

(i) மனிதர்கள் அல்லது விலங்குகள் உட்கொள்வதற்கு அல்லது

உடலின்மீது தடவுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து வகை மருந்துப் பொருட்கள் மற்றும் மனிதர்கள் அல்லது விலங்குகளின் நோய்க்காக அல்லது நோயினை அறிவதற்காக, நோய்க்கான சிகிச்சைக்காக, நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக அல்லது தடுப்பதற்காகப் பயன்படுத்தக் கருதப்படுகின்ற அனைத்து வகைப் பொருட்கள்;

(ii) அரசு, அறிவிக்கையின் வாயிலாக அவ்வப்போது குறிப்பிடக்கூடிய, (உணவுப்பொருட்கள் நீங்கலாக) மனிதனின் ஏதேனும் உடல் அமைப்பினை அல்லது ஏதேனும் இயக்கத்தினைப் பாதிக்கக்கூடிய அல்லது மனிதர்கள் அல்லது விலங்குகளுக்கு நோய் ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் அல்லது பூச்சிகளை அழிப்பதற்குப் பயன்படுத்தக் கருதப்படுகிறதுமான பொருட்கள், மற்றும் 1940ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 23/1940) பிரிவு 3இன் கூறு (b) உட்கூறு (ii)இன்படி மைய அரசால் அவ்வப்போது குறிப்பிடக்கூடியதும், அரசுத்துறை ஒன்றுக்குச் சொந்தமான அல்லது அதன் பொறுப்பில் அல்லது உடைமையில் உள்ளதும், அரசுத்துறை ஒன்றைச் சேர்ந்ததென்று

அரசின் அறிவிப்பின் மூலம் குறிப்பிடக்கூடிய முத்திரை அல்லது குறியினைக் கொண்டுள்ளதுமான பொருட்கள்,

ஆகியவை இதில் அடங்கும்;

(2) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(3) "ஆய்வாளர்" என்பது, 1940ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 23/1940) பிரிவு 21இன்கீழ் அரசு நியமித்துள்ள ஆய்வாளர் எனப் பொருள்படும்; இதில் காவல்துறையின் உதவி ஆய்வாளர் பதவித்தரத்திற்குக் குறையாத அலுவலரும், அரசு இது சார்பாக அறிவிப்பு வெளியிடுவதன் மூலம் குறிப்பிடக்கூடிய ஏனைய அலுவலரும் அடங்குவர்;

(4) "பிற பண்டகப் பொருட்கள்" என்பது, பொருட்கள், கருவிகள், சாதனங்கள் அல்லது அரசுத்துறை ஒன்றுக்குச் சொந்தமான அல்லது அதன் பொறுப்பில் அல்லது உடைமையில் உள்ளதும், அரசுத்துறை ஒன்றைச் சேர்ந்ததென அரசின் அறிவிப்பின் மூலம் குறிப்பிடக்கூடிய முத்திரை அல்லது குறியினைக் கொண்டுள்ளதுமான இதரப் பொருட்கள் அடங்கும்.

3. **மருந்து அல்லது பிற பண்டகப் பொருட்களைச் சட்டவிரோதமாக வைத்திருத்தல்.–** (1) அரசுத் துறை ஒன்றுக்குச் சொந்தமானதும் அல்லது அரசுத் துறை ஒன்றின் பொறுப்பில் அல்லது உடைமையில் உள்ளதும், பிரிவு 2இன் கூறுகள் (1) மற்றும் (4)இன் கீழ் அறிவிக்கையிடப்படக்கூடிய முத்திரை அல்லது குறியீடுகளைக் கொண்டுள்ளதும், இவை திருடப்பட்டதாக அல்லது சட்டவிரோதமாகப் பெற்றதாக சந்தேகிக்கப்படுவதுமான மருந்துப் பொருட்கள் அல்லது

பிற பண்டகப் பொருட்கள் எவற்றையும், எவரும் வைத்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அவர்வசம் இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டாலும், தன்வசம் உள்ள பொருட்கள் தன்வசம் எவ்வாறு வந்தன என்பதற்கான காரணத்தை மனநிறைவடையும் வகையில் அவர் தெரிவிக்க இயலாவிட்டாலும், முதல் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனையும் மூன்றாயிரம் ரூபாய் வரையில் பணத்தண்டமும் அவருக்கு விதிக்கப்பட வேண்டும்; ஆனால், அவ்வாறு விதிக்கப்படும் சிறைத்தண்டனை ஓராண்டுக்குக் குறையாமலும் தண்டத் தொகை ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

(2) இரண்டாவது குற்றத்திற்கு அல்லது அதற்கு அடுத்து வருகின்ற குற்றத்திற்காக, அவருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் பணத்தண்டத் தொகையும் விதிக்கப்பட வேண்டும்; ஆனால், அச்சிறைத்தண்டனை இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமலும் தண்டத் தொகையானது இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

**4. ஆய்வாளரின் அதிகாரங்கள்**.– (1) ஓர் ஆய்வாளர், அவர் நியமிக்கப்பட்டிருக்கிற பகுதிக்குள்,–

(a) இச்சட்டத்தின்படி குற்றம் நடந்துள்ளதாக அல்லது நடப்பதாக நம்பக் காரணம் இருக்கின்ற எந்த ஒரு இடத்திற்குள்ளும் தாம் அவசியமாகக் கருதுகின்ற உதவியாளர்களுடன், நியாயமான காலநேரத்தில் நுழைந்து சோதனையிடலாம்; இச்சட்டத்தின்படி குற்றம் நடந்துள்ளதாக அல்லது நடப்பதாக நம்பக் காரணமிருக்கின்ற மேற்சொன்ன மருந்துப் பொருட்கள்

அல்லது பண்டகப் பொருட்கள் இருப்பைக் கைப்பற்றலாம்; மற்றும்

(b). கூறு (a) இல் குறிப்பிடப்பட்ட இடம் எதிலும் காணப்படுகின்ற பதிவுறு, பதிவேடு, ஆவணம் அல்லது வேறு சான்றுப்பொருள்கள் எதனையும் ஆய்வுசெய்து, இச்சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் ஒன்று நடந்திருப்பதற்கு அது சாட்சியாக இருக்கக்கூடும் என்று அவர் நம்பக் காரணம் இருந்தால், அதனைக் கைப்பற்றலாம்.

(2). 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) பிரிவு 94இன்படி பிறப்பிக்கப்பட்ட பிடியாணை அதிகாரத்தின் பேரில் செய்யப்பட்ட சோதனைக்கு அல்லது கைப்பற்றுதலுக்கு மேற்சொன்ன வகைமுறைகள், எந்த அளவுக்குப் பொருந்துகின்றனவோ, அதே அளவுக்கு இச்சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் சோதனைக்கு அல்லது கைப்பற்றுதலுக்குப் பொருந்தும்.

(3). உட்பிரிவு (1)இன் கூறு (a) இன்படி ஆய்வாளர் ஒருவர், மருந்துப் பொருள், பண்டகப் பொருள் இருப்பைக் கைப்பற்றினால், அது பற்றிய தகவலைக் கூடியவிரைவில், நீதித்துறை நடுவர் ஒருவருக்குத் தெரியப்படுத்துவதோடு அவற்றைப் பாதுகாப்பது குறித்து அவரிடமிருந்து உத்தரவு பெறவேண்டும்.

(4). உட்பிரிவு (1)இன் கூறு (b) இன்படி, ஆய்வாளர் ஒருவர், பதிவுறு, பதிவேடு, ஆவணம் அல்லது வேறு ஏதாவது ஒரு சான்றுப் பொருள் ஆகியவற்றைக் கைப்பற்றினால், அது பற்றிய தகவலைக் கூடியவிரைவில், நீதித்துறை நடுவர் ஒருவருக்குத் தெரியப்படுத்துவதோடு, அவற்றைப் பாதுகாப்பது குறித்து அவரிடமிருந்து உத்தரவு பெறவேண்டும்.

(5) இச்சட்டத்தின் மூலம் அல்லது இச்சட்டத்தின்படி ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதை ஒருவர் வேண்டுமென்றே தடுத்தால், அவருக்கு ஓராண்டு வரை சிறைத்தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரையில் பணத்தண்டமோ அல்லது இவை இரண்டுமோ விதிக்கப்பட வேண்டும்.

**5. காப்பு.**– இச்சட்டத்தின் மூலம் அல்லது இச்சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்ற செயல் ஒன்றிற்காக, அரசு அல்லது அரசு அலுவலரின் மீது வழக்கு எதுவும் தொடரப்படுதல் கூடாது; சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படக் கூடாது.

**6. பறிமுதல் செய்வதற்கு உட்பட்ட பொருள்கள்**.– இச்சட்டத்தினை மீறி குற்றம் செய்யப்பட்டிருப்பின், எந்த மருந்துப் பொருட்கள் அல்லது பண்டகப் பொருட்கள் தொடர்பாகக் குற்றம் நிகழ்ந்திருக்கிறதோ, அவை, அரசால் பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டவையாகும்.

**7. எவ்வாறு பறிமுதல் செய்வது**.– (1) குற்றம் செய்தவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுகின்றபோது அல்லது இச்சட்டத்தினை மீறி குற்றம் செய்ததாகக் குற்றச்சாட்டில் இருப்பவர் குற்றவாளி இல்லையெனத் தீர்ப்பளித்து விடுவிக்கப்படும்போது, எந்த ஒரு பொருள் பறிமுதலுக்கு உட்பட்டது என நீதிமன்றம் முடிவு செய்கிறதோ, அதனைக் கைப்பற்ற நீதிமன்றம் உத்தரவிடலாம்.

(2) இச்சட்டத்தினை மீறிச் செய்துள்ள குற்றம் தொடர்பான வழக்கை விசாரிக்கையில், எந்த ஒரு பொருளும் பறிமுதலுக்கு உட்பட்டது என நீதிமன்றம் முடிவு செய்தால் அதனைக் கைப்பற்ற நீதிமன்றம் உத்தரவிடலாம்.

**8. மருந்துப்பொருட்களையும் பிற பண்டகப் பொருட்களையும் தீர்வு செய்தல்.–** இச்சட்டத்தின்படி மருந்துப் பொருட்கள் அல்லது பிற பண்டகப் பொருட்கள் எவையும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தால், அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட மருந்துப்பொருட்களும் அல்லது பிற பண்டகப் பொருட்களும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் மருத்துவச் சேவைத் துறை அலுவலரின் வசம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

**9. சிலரை அரசுப் பணியாளர்களாகக் கருதுதல் வேண்டும்.–** இச்சட்டத்தின்படி அதிகாரம் செலுத்தும்போது அல்லது கடமையாற்றும்போது ஆய்வாளரும், அரசின் அதிகாரம் பெற்ற ஒவ்வொரு அலுவலரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 45/1860), பிரிவு 21இல் கூறப்பட்டுள்ள பொருள் விளக்கப்படி அரசுப் பணியாளராகக் கருதப்பட வேண்டும்.

**10. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** அரசு, இச்சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக விதிகளைச் செய்யலாம்.

**11. விதிகள், அறிவிக்கைகளைச் சட்டமன்றத்தில் வைத்தல் வேண்டும்.–**(1) (a) இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட எல்லா விதிகளும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.இவ்விதிகள் குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தால் தவிர, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இச்சட்டத்தின்படி வெளியிடப்படும் எல்லா அறிவிக்கைகளும், குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தால் தவிர, அவை அவ்வாறு

வெளியிடப்படும் நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்படி செய்யப்படும் ஒவ்வொரு விதியும் அல்லது வெளியிடப்படும் ஒவ்வொரு அறிவிக்கையும், அது செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றத்தின் இரு அவைகள் முன்பும் வைக்கப்பட வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதற்கடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் அவ்விதியில் அல்லது அவ்வறிவிக்கையில் ஏதேனும் திருத்தம் செய்யவேண்டுமென இரு அவைகள் ஒப்புக்கொண்டால், பின்னர் அவ்விதி அல்லது அவ்வறிவிக்கை அத்திருத்தப்பட்ட வடிவிலேயே செல்திறன் பெறும் அல்லது அவ்விதியை இயற்றக்கூடாது அல்லது அவ்வறிவிக்கையை வெளியிடக் கூடாதென இரு அவைகளும் ஒப்புக்கொண்டால், அவ்விதி அல்லது அவ்வறிவிக்கை செல்திறன் அற்றுப்போகும். எவ்வாறாயினும், அந்த மாற்றம் அல்லது நீக்கம், அவ்விதியின் அல்லது அறிவிக்கையின்படி முன்னரே செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.